RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-100 | 17 ஏப்ரல் | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ராஜேந்திரபாலாஜி மீதான வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல்



ஸ்ரீவில்லிபுத்தூர், ஏப்.17

ஆவின் உள்ளிட்ட அரசு நிறுவனங்களில் வேலை வாங்கித் தருவதாக ரூ.3 கோடி மோசடி செய்த வழக்கில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திரபாலாஜி மீது ஸ்ரீவில்லிபுத்தூர் ஜே.எம்.2 நீதிமன்றத்தில் ஆன்லைன் மூலம் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த அதிமுக ஆட்சியில் பால்வளத்துறை அமைச்சராக இருந்த கே.டி.ராஜேந்திரபாலாஜி ஆவினில் வேலை வாங்கித் தருவதாக ரூ.30 லட்சம் பெற்றுக்கொண்டு ஏமாற்றி விட்டதாக சாத்தூரைச் சேர்ந்த அதிமுக நிர்வாகி ரவீந்திரன் என்பவர் கடந்த 2021ம் ஆண்டு நவம்பர் 15ம் தேதி விருதுநகர் குற்றப்பிரிவு போலீஸில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் அதிமுக நிர்வாகி விஜய் நல்லதம்பி, முன்னாள் அமைச்சர் ராஜேந்திரபாலாஜி உள்ளிட்ட 8 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அதே நாளில் விஜய் நல்லதம்பி அளித்த புகாரில் சத்துணவு, கூட்டுறவு, ஆவின், ஊராட்சி செயலர் உள்ளிட்ட வேலைகளுக்கு பலரிடம் பணம் பெற்று, ராஜேந்திரபாலாஜியிடம் ரூ.3 கோடி கொடுத்ததாக அளித்த புகாரில் ராஜேந்திரபாலாஜி உட்பட 7 பேர் மீது மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் தலைமறைவான முன்னாள் அமைச்சர் ராஜேந்திரபாலாஜியை 18 நாட்களுக்கு பின் கடந்த 2022ம் ஆண்டு ஜனவரி 5ம் தேதி கர்நாடகா மாநிலத்தில் வைத்து தமிழக போலீஸார் கைது செய்தனர். இந்த வழக்கில் கடந்த 2023 ஜனவரி மாதம் ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் ஆன்லைன் மூலம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் முன்னாள் அமைச்சர் மீதான மேல் விசாரணைக்கு ஆளுநர் அனுமதி வழங்காததால் நிலுவையில் இருந்து வந்தது.

கடந்த 2021ம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ள வழக்கு விசாரணையை விரைந்து முடிக்கக் கோரி ரவீந்திரன் சார்பில் கடந்த ஆகஸ்ட் மாதம் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இதில் வழக்கு விசாரணையை சிபிஐக்கு மாற்றி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவுக்கு தடை விதிக்கக்கோரி ராஜேந்திர பாலாஜி, தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதில் ராஜேந்திர பாலாஜிக்கு எதிரான மோசடி வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றிய சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி மீதான வழக்கில் மேல் நடவடிக்கை எடுக்க தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்தார்.

விருதுநகர் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2ல் ராஜேந்த பாலாஜி வெளியான இரு வழக்குகளிலும் ஆன்லைன் மூலம் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.760 உயர்வு



சென்னை, ஏப்.17

தங்கம் விலை பவுனுக்கு ரூ.760 அதிகரித்து புதிய உச்சத்தை தொட்டுள்ளது. அதன்படி சென்னையில் இன்று (புதன்கிழமை) 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.95 அதிகரித்து ஒரு கிராம் ரூ.8815க்கும், பவுனுக்கு ரூ.760 அதிகரித்து ஒரு பவுன் ரூ.70,520க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலை ஒரு கிராம் ரூ.110க்கும், ஒரு கிலோ பார் வெள்ளி ரூ.1,10,000க்கும் விற்பனையாகிறது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப, தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. கடந்த 12ம் தேதி ஒரு பவுன் ரூ.70,160 ஆக உயர்ந்து, புதிய உச்சத்தை தொட்டது. தங்கம் விலை மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கடந்த 2 நாட்களாக சற்றே குறைந்தது. இந்நிலையில் மீண்டும் புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது. சென்னையில் நேற்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.95 அதிகரித்து ஒரு கிராம் ரூ.8815க்கும், பவுனுக்கு ரூ.760 அதிகரித்து ஒரு பவுன் ரூ.70,520க்கும் விற்பனையாகிறது.

## ரேவதி, பொன்னிக்கு ‘சிறந்த திருநங்கை’ விருது முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்



சென்னை, ஏப்.17

2025ம் ஆண்டுக்கான சிறந்த திருநங்கை விருதை ரேவதி மற்றும் பொன்னி ஆகியோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இது குறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு: திருநங்கைகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக பல்வேறு நலத் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அவர்களை சமூகத்தின் முக்கிய பங்களிப்பாளர்களாக அங்கீகரித்து சிறப்பிக்கும் விதமாக 2021ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ‘சிறந்த திருநங்கை’ விருது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த விருதானது திருநங்கைகளின் நலனுக்காக அயராது பாடுபட்டு, சமூகத்தில் முன்மாதிரியாகத் திகழும் திருநங்கை ஒருவருக்கு வழங்கப்படுகிறது. சமூக நலத்துறை அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புக் குழுவால் தேர்வு செய்யப்படும் இந்த விருதாளருக்கு, திருநங்கைகள் தினமான ஏப்ரல் 15ம் தேதி விருது வழங்கப்படுகிறது. விருதாளருக்கு ரூ.1 லட்சத்துக்கான காசோலை, சேவை மற்றும் சாதனைகளை பாராட்டும் விதமாக சான்றிதழும் வழங்கப்படுகிறது.

அந்த வகையில், தனது சொந்த உழைப்பாலும், தனித்திறமையாலும் முன்னேறி, பல திருநங்கை மக்களின் வாழ்வில் மாற்றம் கொண்டு வந்து, அவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்துவரும் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை அ.ரேவதியின், சிறந்த சமூக சேவையைப் பாராட்டியும், திருநங்கைகள் தங்களது அயராத முயற்சியால் கல்வியிலும், கலையிலும் சிறந்து விளங்க முடியும் என்பதற்கு முன்னுதாரணமாகத் திகழும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை க.பொன்னியின் சிறந்த சமூக பங்களிப்பைப் பாராட்டியும், தமிழக அரசின் 2025ம் ஆண்டுக்கான சிறந்த திருநங்கை விருது மற்றும் தலா ரூ.50 ஆயிரத்துக்கான காசோலை மற் றும் பாராட்டுச் சான்றிதழை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கீதாஜீவன், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், சமூக நலத்துறை செயலர் ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல ஆணையர் ஆர்.லில்லி ஆகியோர் பங்கேற்றனர்.

கட்டணமில்லா பேருந்து பயணம், திருநர்களின் உயர்கல்விச் செலவை அரசே ஏற்கும். புதுமைப்பெண் திட்டம் திருநங்கையருக்கும் விரிவாக்கம், ஊர்க்காவல் படையில் திருநர்கள் என அதனை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்கிறது நம் திராவிட மாடல் அரசு. திருநர்களின் கல்வி, வாழ்வாதாரத்தை மேம்படுத்தி சமூகத்தில் அவர்களின் மாண்பை உறுதி செய்வோம்’ என தெரிவித்துள்ளார்.

## பாஜகவுடன் கூட்டணி மட்டும்தானா, கூட்டணி ஆட்சியுமா? அமித்ஷா பேச்சுக்கு இபிஎஸ் ‘புதிய’ விளக்கம்



சென்னை, ஏப்.17

“பாஜகவுடன் கூட்டணி அமைத்துள்ளோம். கூட்டணி ஆட்சி அமைப்போம் என்று அமித் ஷா கூறவில்லை” என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் இருந்து நேற்று (புதன்கிழமை) அதிமுக வெளிநடப்பு செய்தது. பின்னர் செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி வெளிநடப்பு ஏன் என்று விளக்கிப் பேசினார். தொடர்ந்து அவரிடம் பல்வேறு கேள்விகளும் கேட்கப்பட்டது. அதில் கூட்டணி தொடர்பான ஒரு கேள்விக்கு பதிலளித்த எடப்பாடி பழனிசாமி, “பாஜக அதிமுக கூட்டணி இணைந்து ஆட்சி அமைக்கும் என்றே உள்துறை அமைச்சர் அமித் ஷா சொன்னார். மீண்டும் அவர் தெளிவுபட டெல்லியில் மோடி தலைமையிலும், தமிழகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி அமைகிறது என்று கூறினார். கூட்டணி என்று தான் சொன்னாரே தவிர கூட்டணி ஆட்சி என்று சொல்லவில்லை. நீங்களாகவே ஏதாவது பொருள் தேடாதீர்கள்” என்று கூறினார்.

**அமித் ஷா பேசியது என்ன?**

கடந்த 11ம் தேதி சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த அமித் ஷா கூறும்போது, “பாஜக தலைவர்களும், அதிமுக தலைவர்களும் இணைந்து கூட்டணியை உருவாக்கி இருக்கிறோம். வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலை தேசிய ஜனநாயக கூட்டணி (என்டிஏ) கட்சிகளுடன் இணைந்து சந்திக்க இருக்கிறோம். வரும் தேர்தலின் போது தேசிய அளவில் பிரதமர் மோடி தலைமையிலும், தமிழகத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையிலும் போட்டியிட இருக்கிறோம்.

வரப்போகும் சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக அதிமுகவின் தேசிய ஜனநாயக கூட்டணி பெரும்பான்மையான வாக்குகளை பெற்று ஆட்சியமைக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. பாஜகவும், அதிமுகவும் இணைந்துதான் தமிழகத்தில் கூட்டணி ஆட்சியமைக்கப் போகிறோம். அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தலைமையில்தான் கூட்டணி இருக்கும்.

அமைச்சரவை குறித்து வெற்றி பெற்ற பிறகு முடிவு செய்யப்படும். எங்களுடன் கூட்டணியில் இணைந்ததற்கு அதிமுக எந்தவித கோரிக்கையும், நிபந்தனையும் விதிக்கவில்லை. அதிமுகவின் உட்கட்சி விவகாரத்தில் பாஜகவின் தலையீடு ஒருபோதும் இருக்காது. கூட்டணியில் இணைவதன் மூலம் இருதரப்புக்குமே பலனிருக்கிறது. யார் யாருக்கு எத்தனை தொகுதிகள் என்பதும், வெற்றி பெற்ற பிறகு ஆட்சியில் எத்தகைய பங்கு என்பதும் பின்னர்தான் பேசப்படும்” என்று அமித் ஷா பேசியிருந்தார்.

**கூட்டணி மட்டும்தான்; கூட்டணி ஆட்சியில்லை...**

இந்நிலையில், இன்று செய்தியாளர்களை சந்தித்த இபிஎஸ், “கூட்டணி என்று அமித் ஷா சொல்லவே இல்லை. நீங்கள் ஏதேதோ வித்தை காட்டுகிறீர்கள். பாஜக அதிமுக கூட்டணி, ஆட்சி அமைக்கும் என்றார். நீங்களாகவே ஏதாவது வார்த்தைகளைப் பிடுங்கி விறுவிறுப்பான செய்தியைத் தேடுகிறீர்கள். உங்கள் விஞ்ஞான மூளையைப் பயன்படுத்தாதீர்கள். அதையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்” என்று கூறியுள்ளார்.

அதிமுக பாஜக கூட்டணி அறிவிக்கப்பட்டு ஒரு வாரத்துக்குள்ளதாகவே இவ்வாறு குழப்பம் ஏற்பட்டுள்ளது கவனம் பெறுகிறது. மேலும் வரும் 2ம் தேதி அதிமுக செயற்குழு கூட்டமும் நடைபெறவிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாண முன்பதிவு சிறப்புக் கட்டணத்தை ரத்து செய்க: இந்து மக்கள் கட்சி



மதுரை, ஏப்.17

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாண முன்பதிவு சிறப்பு கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என இந்து மக்கள் கட்சி கோரிக்கை வைத்துள்ளது.

இது தொடர்பாக மதுரை மாவட்ட இந்து மக்கள் கட்சி தலைவர் சோலை கண்ணன் வெளியிட்டுள்ள அறிக்கை: கடவுளுக்கே கல்யாணம் நடத்தும் ஊரான மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலில் நடைபெறும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாண வைபோகத்தை காண லட்சக்கணக்கான பக்தர்கள் வருவார்கள். இந்நிலையில் திருக்கல்யாணத்தை காண வரும் பக்தர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் கடவுளின் திருமணத்தை காட்சி பொருளாக்கும் விதமாக 200, 500 ரூபாய் என்று ஆன்லைனில் முன்பதிவு சிறப்பு கட்டணம் திருக்கோயில் நிர்வாகம் அறிவித்திருப்பதை இந்து மக்கள் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.

கடந்த வருடம் திருக்கல்யாணத்திற்கு இது போன்று சிறப்பு கட்டணம் என்ற பெயரில் 200, 500 என பணம் செலுத்தி ஆன்லைன் முன்பதிவு செய்யப்பட்ட பக்தர்கள் பெரும்பாலனோருக்கு திருக்கல்யாண டிக்கெட் (பாஸ்) கிடைக்கவில்லை. ஒரு குடும்பத்தில் மூன்று பேர் பதிவு செய்தால் ஒருவருக்கோ அல்லது இரண்டு நபர்களுக்கோ மட்டும் தான் டிக்கெட் கிடைத்தது. ஏதேனும் காரணத்தை கூறி டிக்கெட் கொடுக்க கோயில் நிர்வாகம் மறுத்தது.

இதனால் ஆன்லைனில் பதிவு செய்தவர்கள் குடும்பத்துடன் திருக்கல்யாணத்தை காண முடியவில்லை. மேலும் அதிகமானவர்கள் முன்பதிவு செய்துவிட்டார்கள் என்று குலுக்கல் முறையில் தேர்ந்தெடுப்பது என்பது கண்துடைப்பு நாடகமாக உள்ளது. ஆன்லைனின் முறையாக பதிவு செய்யப்பட்ட டிக்கெட்டுகள் முறைகேடாக செல்வந்தர்களுக்கும், அரசியல் கட்சியினருக்கும் 200, 500 ரூபாய் கட்டண டிக்கெட்டை 5000, 10,000 ரூபாய்க்கு தியேட்டர்களில் திரைப்படம் பார்க்க பிளாக்கில் விற்பது போல் பிளாக்கில் சிலர் டோக்கனை விற்பனை செய்து முறைகேட்டில் ஈடுபட்டது கடந்த ஆண்டு நடைபெற்றது.

அதேபோல் இந்த வருடமும் திருக்கல்யாணத்தை முன்னிட்டு ஆன்லைன் முன்பதிவு சிறப்பு கட்டணம் என்ற பெயரில் டிக்கெட்கள் விற்பது பல்வேறு முறைகேடுகள் நடைபெற அதிக வாய்புகள் உள்ளது. கடந்த ஆண்டு கட்டணமில்லா பக்தர்கள் திருக்கல்யணத்தை நேரில் காண முடியாமல் நீண்ட நேரம் வரிசையில் நின்றும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பலரும் மயங்கியும், அவதிக்குள்ளாகியும் மன உளைச்சலுக்கும் ஆளாகி வேதனை அடைந்தார்கள்.

இது ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக பக்தர்கள் மத்தியில் எழுந்தது. கடந்த ஆண்டு போல் இந்த ஆண்டும் எந்த ஒரு அசம்பாவித சம்பவமும் நடந்து விடக்கூடாது என்று திருக்கோயில் நிர்வாகம் கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே, மதுரையில் நடைபெறும் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணத்தை காட்சி பொருளாக்கி திருக்கல்யாணத்தை வியாபார நோக்கில் பார்க்காமலும், முறைகேடுகளை தவிர்க்கும் விதமாக ஆன்லைன் முன்பதிவு சிறப்பு கட்டண முறையை ரத்து செய்தும் ஏழை பணக்காரர்கள் என்று வித்தியாசம் இல்லாமல் கடவுளுக்கு முன் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணத்தை அனைவரும் காணும் வகையில் ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலும் உலகப்புகழ் பெற்ற சித்திரை திருவிழாவை முன்னிட்டு மீனாட்சி அம்மன் திருக்கோயிலில் திருக்கல்யாணம் உள்பட தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறுவதால் இத்திருவிழாவை காண தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வருவார்கள். அவர்களுக்கு ஆங்காங்கு போதுமான குடிநீர் வசதிகளும், கழிப்பறை வசதிகளும், போன்ற பல்வேறு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவேண்டும்.

இந்த வருடம் திருக்கல்யாணத்தின் போது எந்த ஒரு குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகாமல் திருக்கல்யாணத்தை சீரும் சிறப்போடும் நடைபெற மீனாட்சி அம்மன் திருக்கோயில் நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கர்நாடகாவில் லாரி உரிமையாளர்கள் வேலைநிறுத்தம் ஓசூர் அருகே பல மணி நேரம் நிறுத்தப்பட்ட லாரிகள்



ஓசூர், ஏப்.17

டீசல் மற்றும் சுங்கக் கட்டண உயர்வைக் கண்டித்து, கர்நாடக மாநில லாரி உரிமையாளர்கள் சங்கம் நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்கியது. இதனால், ஓசூர் அருகே தமிழக லாரிகள் பல மணி நேரம் நிறுத்தப்பட்டிருந்தன.

கர்நாடக மாநில லாரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்த வேலைநிறுத்தம் காரணமாக நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் தமிழக பதிவெண் கொண்ட லாரிகள் அனைத்தும், தமிழக எல்லையான ஓசூர் ஜுஜுவாடியில் நிறுத்தப்பட்டன.

அதேநேரம், வடமாநிலங்களிலிருந்து கர்நாடகா வழியாக வடமாநில பதிவெண் கொண்ட லாரிகள் ஓசூர் வழியாக வழக்கம் போல இயங்கின. இந்நிலையில், நேற்று காலை 10 மணிக்கு மேல் தமிழககர்நாடக எல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தமிழக பதிவெண் கொண்ட லாரிகள் படிப்படியாக இயக்கப்பட்டன. இதனிடையே, கர்நாடக மாநிலம் அத்திப்பள்ளியில் உள்ள அம்மாநில வட்டார போக்குவரத்து அலுவலகம் முன்பு கர்நாடக மாநில லாரி உரிமையாளர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பின்னர், அம்மாநில போக்குவரத்து இணை ஆணையர் ஷோபாவிடம் லாரி உரிமையாளர்கள் கோரிக்கை மனு அளித்தனர்.

தென் மாநில லாரி உரிமையாளர்கள் நலச் சங்க பொதுச் செயலாளர் சண்முகப்பா கூறும்போது, டீசல் விலையைக் குறைக்காவிட்டால் போராட்டம் தீவிரமடையும் என்றார்.



தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சீப்பாலக்கோட்டை ஊராட்சி பகுதிகளில் செயல்பட்டு வரும் பள்ளிகளில் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் காலை உணவு மற்றும் மதிய சத்துணவு வகைகளின் சுவை, தரம் மற்றும் பொருட்களின் காலாவதி தேதி குறித்து வட்டார உணவு பாதுகாப்பு துறை அலுவலர் சுரேஷ் கண்ணன் அவர்கள் ஏப்.15 அன்று திடீர் ஆய்வுகள் மேற்கொண்டார். அதனை தொடர்ந்து, அப்பகுதிகளில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் சுவை பொருட்களின் தரம் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.




வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட அளவிலான போதைப் பொருட்களுக்கு எதிராக விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாஸ்கரன், மாநகராட்சி ஆணையாளர் ஜானகி, மாவட்ட சுகாதார அலுவலர் பரணிதரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வே.முத்தையன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்டம் வீரபாண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா



தேனி ஏப்.17

தேனி மாவட்டம் வீரபாண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இரண்டாவது பட்டமளிப்பு விழா மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங் இ.ஆ.ப அவர்கள் . நடைபெற்றது . இளநிலை பாடப்பி ரிவுகளில் தமிழ்,ஆங்கிலம், பொருளியல்,வணிகவியல், கணினி அறிவியல், கணினி பயன்பாட்டியல் ,கணிதவியல் மற்றும் முதுகலை பாடப்பிரிவுகளில் ஆங்கிலம், பொருளியல் கணினி அறிவியல் ஆகிய பிரிவுகளில் தேர்ச்சி பெற்ற 182மாணவமாணவியர்களுக்கு பட்டங்களையும் மேலும் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார் . இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் உமாதேவி மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் மாணவ மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் .

## மண்ணிவாக்கம் ஊராட்சியில் மாற்று கட்சியிலிருந்து விலகி சுமார் 20 மேற்பட்டோர் திமுகவின் இணைத்துக் கொண்டனர்



மண்ணிவாக்கம் ஏப்17

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய மண்ணிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் கெஜலட்சுமி சண்முகம் தலைமையில் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் எம்.டி.லோகநாதன் அவர்களின் முன்னிலையில் புரட்சி பாரத மாவட்ட துணை அமைப்பாளர் பிரபு, மண்ணிவாக்கம் ஊராட்சி 4வது வார்டு உறுப்பினர் உஷா பிரபு மற்றும் மண்ணிவாக்கம் ஊராட்சியை சேர்ந்த அதிமுக நிர்வாகிகள் சந்திரன், கோபிகேஸ், நிஷாந்த் அமர்நாத், கிருபாகரன் மற்றும் நாம் தமிழர் கட்சி ஒன்றிய துணை செயலாளர் வே.லோகநாதன் உள்ளிட்ட சுமார் 20க்கு மேற்பட்டோர் திமுகவில் இணைத்துக் கொண்டனர் பின்னர் மாற்று கட்சியிலிருந்து வருகை தந்த நிர்வாகிகளை பொன்னாடை போற்றி வாழ்த்துக்கள் தெரி வித்தனர் இதில் ஒன்றிய துணை செயலாளர் மா.வே. பொன்னுசாமி, ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்எஸ். கார்த்திக், ஒன்றிய குழு உறுப்பினர் வி.சோமசுந்தரம்,

ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சுமதி லோகநாதன்,

கிளைக் கழக செயலாளர் அண்ணாதுரை, கே.வி.குமார், மதன்,1வது வார்டு உறுப்பினர் விமல், 9வது வார்டு உறுப்பினர் தெய்வசிகாமணி மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்..

## சிவகங்கை கூடைப்பந்து பயிற்றுநராக பயிற்சி வழங்கிட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு

சிவகங்கை ஏப்17

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாட்டை விளையாட்டில் முதன்மையான மாநிலமாக உருவாக்குவதுடன் தனிநபர்களுக்கு விளையாட்டுகளை முழுத்திறனுடன் அணுகவும், அவர்கள் உயர்மட்ட போட்டிகளில் பங்குபெற்று சிறப்படையவும் வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாக கொண்டு செயல்படுகிறது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மானிய கோரிக்கையின் போது, தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் பிரபலமாக வீரர்கள்/வீராங்கனைகள் பல்வேறு உயரிய நிலையிலான விளையாட்டுப் போட்டிகளில் மகத்தான வெற்றிகளைப் பதிவு செய்ய இயலும் என்பதனை கருத்தில் கொண்டு, தகுதியான பயிற்றுநர்களை மாவட்டந்தோறும் குறிப்பிட்ட விளையாட்டுக்களில் நியமனம் செய்து, வீரர்கள்/வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் உயரிய தரத்திலான விளையாட்டு திறன் மேம்பாடு மற்றும் அங்கீகார மையம் STAR (SPORTSTALENTADVANCEMENT & RECOGNITION) அகாடமி



உருவாக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

அதன்படி, தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் கூடைப்பந்து விளை யாட்டிற்கான ''SDAT-ஸ்டார் அகாடமி மாவட்ட விளையாட்டு பயிற்சி மையம், சிவகங்கை மாவட்ட விளையாட்டரங்கத்தில் அமைக்கப்படவுள்ளது. இம்மையத்தில், 20 விளையாட்டு வீரர்கள், 20 வீராங்கனைகள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு ஒரு மாதத்தில் 25 நாட்கள் தொடர் பயிற்சி வழங்குவதோடு, சிற்றுண்டி, பயிற்சி உபகரணங்கள் மற்றும் விளையாட்டுச் சீருடைகளும் வழங்கப்படவுள்ளது.

மேலும், இம்மையத்தில் கூடைப்பந்து பயிற்றுநராக பயிற்சி வழங்கிட கூடைப்பந்து விளையாட்டில், தேசிய விளையாட்டு நிறுவனம் (அ) இந்திய விளையாட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்ட முதுநிலை விளையாட்டு பயிற்சி சான்றிதழ் அல்லது ஒரு வருட டிப்ளமோ/சான்றிதழ் பயிற்சி (10 மாதங்களுக்கு குறைவாக இருத்தல் கூடாது) அல்லது தமிழ்நாடு உடற்கல்வி பல்கலைக்கழகத்தில் முதுநிலை டிப்ளமோ (விளையாட்டு) அல்லது சர்வதேச விளையாட்டு கூட்டமைப்பால் நடத்தப்பட்ட உரிமம் படிப்பு (License Course) அல்லது நேதாஜி சுபாஷ் விளையாட்டு நிறுவனத்தால் நடத்தப்பட்ட 6 வார சான்றிதழ் படிப்பு படித்தவராக இருத்தல் வேண்டும். மேலும், தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சியாளருக்கு மாதாந்திர சம்பளமாக ரூ.25,000/ வழங்கப்படும். (11 மாதங்கள் செயல்திறன் அடிப்படையில் புதுப்பிக்கப்படும்) பயிற்றுநர் வயது வரம்பு 50க்குள் இருத்தல் வேண்டும். மேலும், பயிற்றுநருக்கான விண்ணப்பத்தை சிவகங்கை மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம். வருகின்ற 20.04.2025 அன்று மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பித்திடல் வேண்டும். தகுதி வாய்ந்த பயிற்றுநர் விண்ணப்பதாரர்களுக்கு, நேர்முகத்தேர்வு சிவகங்கை மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெறும். உடற்தகுதி, விளையாட்டுத்திறன், பெற்ற பதக்கங்கள், பயிற்சி வழங்கும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு நடைபெறும்.

விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கான தேர்விற்கு கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர் வீராங்கனைகள் 12 வயது முதல் 21 வயது வரை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். விளையாட்டு விடுதி விதிமுறைகள் மூலமாக 20 மாணவர்கள் மற்றும் 20 மாணவிகள் என சிவகங்கை மாவட்ட மைத்திற்கு 40 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். அவ்வாறாக, தேர்வு செய்யப்படுபவர்களுக்கு ஒரு மாதத்தில் 25 நாட்கள் தொடர் பயிற்சி வழங்கிடுவதோடு, சிற்றுண்டி, பயிற்சி உபகரணங்கள் மற்றும் விளையாட்டுச் சீருடை போன்றவைகள் வழங்கப்படும்.

மேலும், இத்தேர்வில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் வருகின்ற 24.04.2025 அன்று சிவகங்கை மாவட்ட விளையாட்டரங்கிற்கு நேரில் வருகை தர வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.



வேலூர் மாவட்டம், வேலூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அனைத்து ஊழியர்கள் நல சங்கம் சார்பில் மாலை நேர கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்.. எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியுமீ ஊழியர்களுக்கு, ஊதிய குறைப்பை கைவிட வலியுறுத்தியும்... 20% ஊதிய உயர்வு வழங்கிட கோரியும் மூன்று தீர்மானங்களை நிறைவேற்றி இது குறித்து கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

## பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழக முடிச்சூர் ஊராட்சிக்கு உட்பட்ட பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்

முடிச்சூர் ஏப்17

செங்கல்பட்டு மாவட்டம் அதிமுக பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித்தமிழர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தாம்பரம் சட்டமன்றத் தொகுதி பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழக முடிச்சூர் ஊராட்சிக்கு உட்பட்ட பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் மற்றும் ஆலோசனை கூட்டம் பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.பி.மனோகரன் தலைமையில் மாவட்ட கழக பிரதிநிதி முடிச்சூர் 8வது வார்டு உறுப்பினர் ஏ.அருள், பரங்கிமலை மேற்கு ஒன்றிய எம்ஜிஆர் மன்ற துணைச் முன்னாள் முடிச்சூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சசிகலா கல்கி பரங்கிமலை மேற்கு ஒன்றிய அம்மா பேரவை இணைச் செயலாளர் டிவிஆர். வெங்கட்ராமன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது





இதில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சர் கழக வர்த்தக அணி செயலாளர் சீ.த.செல்ல பாண்டியன், அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் நாவலூர் முத்து, செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பொறுப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள் முடிச்சூர் ஊராட்சி கிளை கழக செயலாளர்கள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

## வேலூரில், உலகளவில் புகழ்பெற்ற நருவீ மருத்துவமனை நிறுவனம் சார்பில் 18ஆம் தேதி கிரிக்கெட் வீரர்கள் தேர்வு

### மருத்துவமனை தலைவர் சம்பத் அறிவிப்பு

வேலூர், ஏப்.17

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, தோட்டப்பாளையம், வேலூரில் உள்ள உலகளவில் புகழ்பெற்ற நறுவீ மருத்துவமனை நிறுவனம் சார்பில், மாவட்டங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி வேலூர் டீமுக்கு வீரர்கள் தேர்வு வரும் 18ஆம் தேதி வேலூர் கிரிக்கெட் சங்கம் நடத்துகிறது என நறுவீ மருத்துவமனை தலைவர் சம்பத் இத்தகவலை அறிவித்துள்ளார். மாவட்டங்கள் இடையேயான கிரிக்கெட் போட்டியில் வேலூர் மாவட்ட அணி சார்பில் பங்கேற்க தகுதியான கிரிக்கெட் வீரர்களை தேர்வு செய்வதற்கு வேலூர் மாவட்டத்தை



சேர்ந்தவர்களுக்கான தேர்வு வரும் 18ஆம் தேதி வேலூரில் நடைபெற உள்ளதாக மாவட்ட கிரிக்கெட் சங்க தலைவரும் நறுவீ மருத்துவமனை தலைவருமான முனைவர். ஜி.வி.சம்பத் தெரிவித்துள்ளார்.

இது சம்மந்தமாக அவர் மேலும் கூறிள்ளதாவது: நடைபெற இருக்கும் மாவட்டங்கள் இடையேயான கிரிக்கெட் போட்டியில் வேலூர் மாவட்ட அணி சார்பில் பங்கேற்க வேலூர் மாவட்டத்தில் உள்ள இளம் கிரிக்கெட் வீரர்கள் தேர்வு செய்வதற்கான நிகழ்வு நாளை 18ஆம் தேதி சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் வேலூர் சேண்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள திருமதி. ராஜேஸ்வரி வளாகத்தில் நடைபெறுகிறது, அன்று காலை 9 மணிக்கு தொடங்கும் இத்தேர்வில் 16 வயது மற்றும் 19 வயது என இரு பிரிவாக தேர்வு செய்யப்பட உள்ளனர். 19 வயது பிரிவில் பங்கேற்க

உள்ளவர்கள் 01.09.2006 அன்றோ அதற்கு பிறகோ பிறந்தவர்களாக இருக்க வேண்டும். 16 வயது பிரிவிற்கு 01.09.2009 அன்றோ அதற்கு பிறகோ பிறந்தவர்களாக இருக்க வேண்டும். வீரர்கள் தேர்வுக்கு வருபவர்கள் கிரிக்கெட் சீருடை மற்றும் ஆதார் அட்டையுடன் வரவேண்டும். இது சம்மந்தமாக மேலும் தகவல் அறிய வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்க கௌரவ சங்க செயலாளர் எஸ். ஸ்ரீதரன் என்பவரை மொபைல் எண் 7010594657 மூலமாக தொடர்பு கொண்டு விவரங்கள் அறியலாம் என்று இவ் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.



திருநெல்வேலியில் உலக புகழ் பெற்ற இருட்டுக்கடை அல்வா உரிமையாளரான கவிதா சிங்கின் மகள் ஸ்ரீ கனிஷ்கா தனது கணவர் வீட்டினர் வரதட்சணையாக இருட்டுக்கடை அல்வாவின் உரிமையை தங்களுக்கு மாற்றி தரும்படி கொலை மிரட்டல் விடுப்பதாக புகார் தெரிவித்துள்ளார். இச்சம்பவத்தால் திருநெல்வேலியில் மிகப்பெரிய பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக ஒருங்கிணைந்த வைப்பறையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் VVPAT கருவிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மேற்படி பாதுகாப்பு வைப்பறையில் உள்ள தீயணைப்பான் கருவிகளை புதுப்பிக்கும் பொருட்டு, தேனி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) த.முத்துமாதவன் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரின் முன்னிலையில் மின்னணு பாதுகாப்பு வைப்பறையில் உள்ள தீயணைப்பு கருவிகள் உரிய நிறுவனத்தின் மூலம் புதுப்பிக்க வெளியே எடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் தேனி மாவட்ட ஆம் ஆத்மி கட்சியின் சார்பாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என்.ஆர்.சிவாஜி கலந்து கொண்டார்.



மதுரை சொக்கிகுளம் உழவர் சந்தையின் 25ஆம் ஆண்டை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா தலைமையில் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. வேளாண்மை இணை இயக்குநர் சுப்புராஜ் , வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) மெர்சி ஜெயராணி ஆகியோர் உடன் உள்ளனர்.

## கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி ஏப்17

கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் தோவாளை வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, நேற்று (16.04.2025) நேரில் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் தேவைகளுக்காக பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் ஊரகப்பகுதியில் வசிக்கும் வீடு இல்லாத ஏழை, எளிய மக்கள் பாதுகாப்புடன் வசிக்க வேண்டும் எனவும், அனைவருக்குமே பாதுகாப்பான நிரந்தர கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்காக கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை அறிவித்து, இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ.3.10 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.





அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்துக்குட்பட்ட செண்பகராமன்புதூர் பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தற்போது பூச்சு வேலைகள் நடைபெற்று வருகிறது. கட்டப்பட்டு வரும் வீட்டின் அடிப்படை வசதிகள், கட்டுமான பணிகளின் தரம் உள்ளிட்டவைகள் ஆய்வு மேற்கொண்டதோடு, கட்டுமான பணிகள் தொய்வின்றி நடைபெற பயனாளிக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பணிகளை தரமானதாகவும், உறுதித்தன்மையுடன் அமைத்திடுவதை துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

மேலும் ஊரகப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, தற்போது சீரமைக்க முடியாமல் மிகவும் பழுதடைந்த வீடுகளுக்கு பதில் புதிய வீடுகளை கட்டித்தர முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ.2.40 இலட்சம் வழங்கப்படவுள்ளது. இன்று முதற்கட்டமாக செண்பகராமன்புதூர் பகுதியில் பழுதடைந்த வீடுகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தகுதியானவர்களுக்கு விரைவில் வீடுகள் கட்டுவதற்கான ஆணை வழங்க துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் செண்பகராமன்புதூர் புதுக்குளம் தூர்வாரும் பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து ஆதிச்சன்புதூர் அங்கன்வாடி மையத்தில் பொருட்கள் வைக்கும் இடம், குழந்தைகள் விளையாடுவதற்கான இடம், குழந்தைகளுக்கான கழிப்பறை, குடிநீர் வசதி, உள்ளிட்டவைகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் .ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்..

## மறைந்த தலைமை காவலரின் குடும்பத்தினருக்கு உதவித்தொகை வழங்கிய மாநகர காவல் ஆணையர்



மதுரை: ஏப் 17

மதுரை மாநகர் காவல் துறையில் 2000 ஆண்டில் பணியில் சேர்ந்து JAP (juvenile aided police) பிரிவில் பணிபுரிந்த தலைமை காவலர் ராஜு என்பவர் உடல் நலக்குறைவு கிட்னி பாதிப்பு ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பலனின்றி கடந்த பிப்ரவரி மாதம் மரணம் அடைந்தார். மறைந்த தலைமை காவலருடன் கடந்த 2000 வருடம் பணியில் சேர்ந்த தமிழக காவல்துறையில் பணிபுரியும் அவருடைய நண்பர்கள் பாதிக்கப்பட்ட அவரது குடும்பத்தினருக்கு உதவும் நோக்கில் வசூல் செய்த பணம் ரூ.1,55,000/க்கான காசோலையுடன் தன்னுடைய பங்களிப்பையும் மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் ராஜுவின் மனைவி மற்றும் குழந்தைகளிடம் சக காவலர்கள் முன்னிலையில் நேரில் வழங்கினார்கள்.இந்த நிகழ்வில் 2000 ஆண்டு பணியில் சேர்ந்த காவலர்கள் கலந்து கொண்டனர்



இராமநாதபுரம் மாவட்டத்தில் காவல்துறையினரின் ரோந்து பணியை தீவிரப்படுத்தும் விதமாக காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ். நேற்று முதற்கட்டமாக இராமநாதபுரம் Town Patrol-II மற்றும் பரமக்குடி நகர் உச்சிப்புளி சாயல்குடி திருவாடானை முதுகுளத்தூர் ஆகிய காவல் நிலையங்களில் பணிபுரியும் காவல் ஆய்வாளர்களுக்கு நான்கு சக்கர வாகனங்களை வழங்கினார்..

## மண்ணிவாக்கத்தில் அம்பேத்கரின் 134வது பிறந்த நாளை முன்னிட்டு தவெக சார்பில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி





மண்ணிவாக்கம் ஏப் 17

மண்ணிவாக்கத்தில் அம்பேத்கரின் 134வது பிறந்த நாளை முன்னிட்டு தவெக சார்பில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் மண்ணிவாக்கத்தில் அம்பேத்கரின் 134ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மண்ணிவாக்கம் பேருந்து நிலையத்தில் திருவுருவ படத்திற்கு தவெக சார்பில் மாலை அணிவித்து மாரியாதை செலுத்தப்பட்டது. தமிழக வெற்றி கழகம் மாவட்ட இளைஞரணி தலைமை தளபதி தம்பி எஸ்.பி.கௌதம் தலைமையில்

இதில் சிறப்பு அழைப்பாளராக கழகப் பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ்.பாலாஜி கலந்து கொண்டு திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பின்னர் அறுசுவை உணவு சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது. லியோ வினித், மண்ணிவாக்கம் விஷ்வா, கு.பார்த்திபன், எஸ்.தளபதி சுந்தர், ப.நாகராஜ், ஆர்.லட்சுமணன், கிருபா, எஸ்.மனோகர், டி.செல்வம், சுறா அன்பு, கு.பிரசாத், ஆனந்த், விஷால், முகமத்நு, குணமணி, ஜெ.விஷால், பிரகாஷ், பிரசாந்த், தரணி ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர் இதில் நூற்றுக்கும் மேற்பட்ட தவெகவினர் அலங்கரிக்கப்பட்ட அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவித்து மாரியதை செலுத்தினர் இந்த நிகழ்ச்சியில் மாவட்டம் ஒன்றிய நகர பகுதி வட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்..

## புதுச்சேரி விநாயகா மிஷன்ஸ் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை திறப்பு விழா

புதுச்சேரி, ஏப்.17

புதுச்சேரி பகுதிக்கான முழுமையான மருத்துவ சேவையளிக்கும் விதமாக உயர் சிறப்புஅதி நவீன மருத்துவமனையான, விநாயகா மிஷன்ஸ் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை (VMSH) புதுச்சேரி முதல்வர் என். ரங்கசாமி திறந்து வைத்தார்.

இந்த விழாவில் உள்துறை அமைச்சர் அ. நமச்சிவாயம் , பொது பணித்துறை அமைச்சர் கே. லட்சுமிநாராயணன் , சட்ட மன்ற சபாநாயகர் ஏம்பலம் ஆர். செல்வம், துணை சபா நாயகர் பி. ராஜவேலு கிருமாம் பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் யு. லட்சுமிகாந்தன், பாகூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆர். செந்தில் குமார் மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்ச்சிக்கு விநாயகா மிஷன்ஸ் பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் ஏ.எஸ். கணேசன், தலைமை தாங்கினார். புதுச்சேரியில் பல்வேறு மருத்துவமனைகள் இருந்த போதிலும், ஒரே இடத்தில் விரிவான, மேம்பட்ட சிகிச்சை




வழங்கும் ஒருங்கிணைந்த சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இல்லாததன் காரணமாக, சிறப்பு சிகிச்சைக்காக நோயாளிகள் சென்னை மற்றும் அதற்கும் அப்பால் பயணம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளதை கருத்தில் கொண்டு டாக்டர் ஏ.எஸ். கணேசன் இந்நவீன மருத்துவமனையை புதுச்சேரி மக்கள் பயன்பெறும் வகையில் அமைய முயற்சி எடுத்து இன்று பயன்பாட்டிற்காக அர்ப்பணித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் விநாயகா மிஷன்ஸ் துணைத் தலைவர் டாக்டர் அனுராதா கணேசன், முதன்மை வியூக அதிகாரி சுரேஷ் சாமுவேல், மருத்துவ இயக்குநர் டாக்டர் ஹரி மேனன், ஆறுபடை வீடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை (AVMCH)இன் நிர்வாகிகள், டாக்டர் கே. தாமோதரன் (டீன்(பொறுப்பு), முன்னாள் ஜிப்மர் இயக்குநர் டாக்டர் விஷ்ணு பட், முன்னாள் எய்ம்ஸ் போபால் இயக்குநர் டாக்டர் சர்மான் சிங், துணை டீன் (நிர்வாகம்) டாக்டர் ராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய டாக்டர் ஏ.எஸ். கணேசன் கூறியதாவது:

“VMSH என்பது புதுச்சேரிக்கு, நவீன தொழில்நுட்பம் சார்ந்த, உயர்தர சிகிச்சை மற்றும் குறைவான செலவில் மருத்துவ சேவைகளை வழங்கும் ஒரு உயர் சிறப்பு மருத்துவமனை. இம்மருத்துவமனையின் முக்கிய குறிக்கோள் “உங்கள் ஆரோக்கியம்; எங்கள் நோக்கம்.” என்று குறிப்பிட்டார்.

இந்த மருத்துவமனை, அவசர சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சை பிரிவுகள், அதிநவீன பரிசோதனை வசதிகள், நவீன அறுவை சிகிச்சை அறைகள் (உயர் தர உறுப்பு மாற்ற அறை உட்பட), மற்றும் பல்வேறு சூப்பர் ஸ்பெஷாலிட்டி பிரிவுகளுடன் செயல்பட உள்ளது.



தேனி மாவட்டம் கம்பம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உத்தமுத்துகால்வாய் நீரினைப் பயன்படுத்தும் விவசாயிகளின் சார்பாக கால்வாயினை சீரமைத்துத் தரவேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றதன் அடிப்படையில் ரூபாய் 12 கோடி மதிப்பில் இரண்டு அணைக்கட்டு புனரமைத்தல் ,35 புதிய மடைகள், 2 ரெகுலேட்டர் சீரமைப்பு,12 கிலோமீட்டர் கால்வாய் முழுமையாக தூர்வாறுதல்,சாலையை முழுவதும் மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகின்றது. இப் பணிகளை தேனி தெற்கு மாவட்ட செயலாளரும் கம்பம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான கம்பம். நா. இராமகிருஷ்ணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தேனி மாவட்டம் பெரியகுளம் உங்களைத் தேடி,உங்கள் ஊரில் திட்டம் மக்களை நாடி குறைகளை தீர்க்க தமிழ்நாடு அரசின் கொண்டு வந்த இந்த திட்டம் பெரியகுளம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.இதில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு மனுக்களை வழங்கினார்கள்.

## பெரியகுளம் அருகே திரவியம் கல்லூரியில் ஆண்டு விழா

பெரியகுளம்:ஏப். 17



தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே கைலாசபட்டியில் உள்ள திரவியம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் ஆண்டு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரி தாளாளர் டாக்டர்.பாண்டியராஜ், செயலாளர் டாக்டர்.ஹேமலதா ஆகியோர் தலைமை வகித்தனர். கல்லூரி இயக்குநர் டாக்டர்.இம்மானுவேல் ஜூடா வாழ்த்துரை வழங்கினார். தமிழத்துறை தலைவர் ரீனா வரவேற்புரையாற்றினார். அதனை தொடர்ந்து திரவியம் கல்வி நிறுவனங்களின் அனைத்து கல்லூரி முதல்வர்களும் ஆண்டறிக்கையை வாசித்தனர். இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக காரைக்குடி மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை தொழில் நுட்ப அலுவலர் பாண்டியம்மாள், கலைஞர்கள் சங்க மாநில துணை செயலாளர், தமிழக முற்போக்கு எழுத்தாளர் சுந்தரவள்ளி ஆகியோர் கலந்து கொண்டு இன்றைய சூழலில் மாணவிகள் கல்வியுடன் தனித்திறன்களை வளர்த்து கொள்வதுடன் தொழில் முனைவோராக உருவெடுத்து பலருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் நிலைக்கு தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும் என பல கருத்துக்கள் குறித்து பேசினர். மேலும் கல்லூரி வளாகத்தில் மாணவிகளின் பரதநாட்டியம், மேற்கத்திய நடனம், நாட்டுப்புற நடனம், கலப்பு நடனம், கருப்பு வெள்ளை நடனம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் கல்லூரி முதன்மை செயல் அலுவலர் டாக்டர்.வசந்த், உதவி பேராசிரியர்கள் அழகன், எப்சிராணி, வணிகவியல் துறை தலைவர் சிவநேசன் மற்றும் பேராசிரியர்கள், மாணவிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு நில அளவைத் துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பாக புதிய குறுவட்டங்கள் உருவாக்கியதற்கு நன்றி

மதுரை, ஏப்.17



தமிழ்நாடு நில அளவைத் துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பாக புதிய குறுவட்டங்கள் உருவாக்கியதற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சரை மாநிலத் தலைவர் மகேந்திர குமார் தலைமையில் சந்தித்து நன்றி தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு நில அளவை பதிவேடுகள் துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கத்தின் மாநில தலைவர் திரு பா பார்த்திபன், தலைமை நிலைய செயலாளர் திரு ஆ அப்துல் காதர் துணைத் தலைவர்

இரா கண்ணன் மரியாதை நிமித்தமாக மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சரை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

அப்பொழுது நில அளவை பதிவேடுகள் துறையின் நிர்வாக அலுவலர்கள் பதவிக்கான காலிட மதிப்பீடு தொடர்பாக அரசாணை பிறப்பிக்க விட வேண்டி உள்ளது என்ற கோரிக்கையை வைத்ததற்கு அமைச்சர் உடனடியாக அதனை நிறைவேற்றித் தருவதாக பெருந்தன்மையுடன் தெரிவித்தார் அதற்கும் தமிழ்நாடு நில அளவைபதிவேடுகள் துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கத்தின் சார்பாக சார்பாகவும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு நில அளவைத் துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பாக மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சர் அவர்களை சந்தித்து ஒரு குறு வட்டத்திற்கு ஒரு குறு வட்ட அளவர் அரசாணை உடனடியாக பிறப்பிக்க வேண்டும், ஐந்து ஆண்டுகள் கடந்து துறை தேர்வு தேர்ச்சி பெற்றவர்களுக்கு வருகின்ற பதவி உயர்வுக்கு முன்பாக தகுதி காண் பருவம் நிறைவு செய்வதற்கு உரிய உத்தரவுகள் பெற்றுத் தர வேண்டும், ஐந்து வருடங்கள் கடந்து தேர்வு எழுத முடியாத சூழ்நிலையில் தேர்ச்சி பெற முடியாத சூழ்நிலையில் உள்ளவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வைத்து மாநிலத் தலைவர் மகேந்திர குமார் தலைமையில் பேசப்பட்டது

இந்நிகழ்வில் நாமக்கல் மாவட்ட செயலாளர் திரு இளவரசன், புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகிகள் திருச்சி மாவட்ட நிர்வாகிகள் கடலூர் மாவட்ட நிர்வாகிகள், சேலம் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் நாமக்கல் மாவட்ட நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அனைத்து கோரிக்கைகளையும் தமிழ்நாடு நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குனர் அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்தும் உடனடியாக அதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதி அளித்துள்ளார்..

## வீரபாண்டி ஸ்ரீ கௌமாரியம்மன் கோவில் சித்திரை கொடியேற்றும்



தேனி, ஏப், 17

தேனி அருகேயுள்ள வீரபாண்டி கவுமாரியம்மன் பிரசித்தி பெற்ற கோயிலாகும். இங்கு ஆண்டு தோறும் சித்திரை திருவிழா மிக சிறப்பாக கொண்டாடப்படும். இத்திருவிழாவில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் பங்கேற்று நேர்த்திக்கடன் செலுத்துவர். இந்த ஆண்டு சித்திரை திருவிழாவிற்கான கொடியேற்றம் ஏப்,15 செவ்வாய்க்கிழமை தொடங்கி ஏப்,16ல் கொடியேற்றம் நடக்கிறது.

முக்கிய திருவிழாக்கள் ஏப், 15 ம் தேதி முதல் மே 14 ம் தேதி வரை 30 நாட்கள் சித்திரை திருவிழா நடக்க உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகத்தினர் செயல் அலுவலர் நாராயணி மற்றும் உதவி ஆணையர் லட்சுமி மாலா செய்து வருகின்றனர். பல்வேறு அமைப்பினர் சார்பில் பக்தர்களுக்கு நீர்மோர் அன்னதானம் தண்ணீர் உள்ளிட்டவை வழங்கப்பட்டன

## அலங்காநல்லூரில் தீயணைப்புத்துறை சார்பில் தீ தொண்டு வாரம்





அலங்காநல்லூர்,ஏப்ரல்.17

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் தீயனைப்புதுறை சார்பில் தீ விபத்தில் உயிரிழந்த தீயணைப்பு வீரர்களுக்கு தீ தொண்டு நினைவு நாள் ஆண்டும் ஏப்ரல் 14ந் தேதி அனுசரிக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து நேற்று நிலைய அலுவலர் சந்தானம் தலைமையில் பணியாளர்கள் தீ விபத்தில்லாத இந்தியாவை உருவாக்கிட ஒன்றிணைவோம் என்ற உறுதிமொழியுடன் தீ தொண்டு நாள் அனுசரிக்கப்பட்டது.பின்னர் தீயணைப்புதுறை சார்பில் இந்த வாரம் முழுவதும் தீ தொண்டு வாரம் அனுசரிக்கப்பட்டு அலங்காநல்லூர் பகுதியில் உள்ள அரசு அலுவலகங்கள்,பள்ளிகள், பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தீ விழிப்புணர்வு துண்டு பிரச்சாரம் வழங்கியும் போலி ஒத்திகை பயிற்சி செய்து காண்பித்தும் வருகின்றனர்.

## சோழவந்தான் அருகே தென்கரை புதூரில் இடுகாட்டு இடம் பாதையை மீட்டுத்தர பட்டியலின மக்கள் கோரிக்கை

சோழவந்தான் ஏப்ரல் 17








மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஒன்றியம் தென்கரை ஊராட்சிக்கு உட்பட்ட புதூர் கிராமத்தில் பட்டியலின மக்களின் மயானத்திற்கு செல்லும் பொதுமக்கள் இறுதி சடங்கு செய்யும் இடமான இடுகாடு பகுதியில் தனி நபர் ஆக்கிரமித்து வீடு கட்டி வருவதால் இறந்தவர்களுக்கு இறுதி சடங்கு செய்வதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதாகவும் ஆகையால் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்து பட்டியலின மக்களின் இடுகாட்டு இடம் மற்றும்

பாதையை மீட்டுத்தர வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த கிராமத்தில் சுமார் 40க்கும் மேற்பட்ட பட்டியலின மக்கள் கடந்த பல வருடங்களாக குடியிருந்து வருகின்றனர் இவர்களுக்கு மயானம் ஒன்று உள்ளது மயானத்திற்கு செல்லும் பாதையில் இறந்தவர்களுக்கு செய்யும் இறுதி மரியாதை அதாவது குடம் உடைக்கும் இடம் என்று சொல்லும் இடுகாட்டு பகுதி உள்ள இடம் மற்றும் பாதையை தனி நபர் ஒருவர் ஆக்கிரமித்து வீடு கட்டி வந்துள்ளார் இந்த நிலையில் பட்டியல் இன மக்களின் ஒரு சிலர் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் முதலமைச்சரின் தனிப்பிரிவு வாடிப்பட்டி வட்டாட்சியர் வருவாய் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரிடத்தில் மனு அளித்ததன் அடிப்படையில் இடு காடு மற்றும் பாதையை ஆக்கிரமித்து வீடு கட்டி வருபவர் பணிகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக தெரிகிறது. இது முழுக்க முழுக்க அரசுக்கு சொந்தமான இடம் என்பதால் இடுகாடு மற்றும்பாதையை ஆக்கிரமித்து வீடு கட்டுபவர் மீது உரிய நடவடிக்கை எடுத்து நிரந்தரமாக பணிகளை நிறுத்த வேண்டும் மேலும் அந்த இடத்தில் பட்டியலின மக்களுக்கான இடுகாடு பகுதி என அறிவிப்பு பலகை நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்



திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு கள்ளர் சீரமைப்பு துறைக்கு பாத்தியப்பட்ட கள்ளர் மாணவர் விடுதியில் தமிழக அரசு சார்பில் வத்தலகுண்டு பேரூராட்சி சமுதாயக்கூடம் கட்டுவதற்கு விடுதி முன்பு உள்ள இடத்தை தேர்வு செய்து சுத்தம் செய்தனர் இதற்கு அனைத்து கள்ளர் அமைப்பு சட்டத்தினர் எதிர்ப்பு தெரிவித்தனர் இந்த இடம் கள்ளர் சீரமைப்புக்கு சொந்தமான இடம் என கூறி எதிர்ப்பு தெரிவித்தனர் இந்தப் பிரச்சனை சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் இடம் மனு கொடுக்கப்பட்டுள்ளது அந்த மனுவுக்கு தீர்வு கண்டவுடன் இந்த நிலத்தை சரி செய்து கொள்ளலாம் என கள்ளர் சீரமைப்பு கூட்டமைப்பு சார்பாக கூறினர்

## மதுரை நகர் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பாக மத்திய பிஜேபி அரசை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்



மதுரை, ஏப்.17

மதுரை மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் கார்த்திகேயன் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது.

ஆர்பாட்டத்தில் ராகுல் காந்தியை பழி வாங்கும் நோக்கத்தோடு அமலாக்கத் துறையை பயன்படுத்தி நேரு குடும்பத்துக்கு அவபேர் ஏற்படுத்தி இருக்கும் மத்திய அரசை ஆட்சியை விட்டு விலகிட வேண்டும் என வலியுறுத்தினர்.இந்நிகழ்வில் ஐந்தாவது பகுதி காங்கிரஸ் கமிட்டி தலைவர் 31 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் தல்லாகுளம் வே.முருகன், மற்றும்அனைத்து காங்கிரஸ் தோழர்களும் நிர்வாகிகள் திரளாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161